ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 1324/18 - 2004 ජනවාරි 21 වැනි බදාදා - 2004.01.21
1324/18 ஆம் இலக்கம் - 2004 ஆம் ஆண்டு சனவரி மாதம் 21 ஆந் திகதி புதன்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

பணிப்புரை இல. : 3

**2003 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபை**

10 (1) ஆம் பிரிவின் கீழான பணிப்புரைகள்

2003 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் 10 (1) ஆம் பிரிவினால் உரித்துடையாக்கப்பட்ட அதிகாரங்களின் கீழ் செயற்பட்டு, அதன்படி அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ள பொருட்களின் தயாரிப்பாளர்களுக்கும், வர்த்தகர்களுக்கும் பாவனையாளர் அதிகார சபையானது :

பொருட்களின் மீது அல்லது பொதியின் மீது அல்லது கொள்கலனின் மீது அல்லது உறையின் மீது :-

(அ) ஆகக் கூடுதலான சில்லறை விலைகளை குறிக்கும் படியும் ;
(ஆ) தொகுதி இலக்கத்தைக் குறிக்கும் படியும், அத்துடன்
(இ) காலாவதியாகும் திகதியைக் குறிக்கும்படியும் கட்டளையிடுகின்றது.

இப்பணிப்புரை 2004 ஆம் ஆண்டு ஏப்ரல் 20 இலிருந்து அமுலாக்கப்படும்.

**அட்டவணை**

(1) பொதிகள் அல்லது கொள்கலன்களில் விற்கப்படும் மா (ஏதேனும் தானியம் மற்றும் பருப்பிலிருந்து தயாரிக்கப்படும் மா);
(2) சவர்க்காரம் (குளியலறை, மருந்தூட்டப்பட்ட குளியலறை, கார்போலிக், சவர, மென்மை, குழந்தை, சலவை);
(3) சலவையகத் தூள் (மென்தகடு போன்ற துண்டுகள், சிறு துண்டுகள்);
(4) குழந்தை தயாரிப்புகள் (சம்பூ, எண்ணெய், முகப்பூச்சுப் பௌடர், லோஷன்கள்);
(5) பொதிகள் அல்லது கொள்கலன்களில் விற்கப்படும் தின்பண்ட வகைகள் கேக் மற்றும் இனிப்பு வகைகள் ;
(6) பற்பசை ;
(7) பற்றரிகள் (டோச் மற்றும் டிரான்ஸிஸ்டர்);
(8) சீனி, பொதிகள் அல்லது கொள்கலன்களில் விற்கப்படுவன ;
(9) பொதிகள் அல்லது கொள்கலன்களில் விற்கப்படும் தானியங்கள் மற்றும் பருப்புகள்
(10) பொதிகளில் விற்கப்படும் பாண் ;
(11) பொதிகள் அல்லது கொள்கலன்களில் விற்கப்படும் கருவாடு மற்றும் மாசிக் கருவாடு ;
(12) பொதிகள் அல்லது கொள்கலன்களில் விற்கப்படும் (சீஸ்) வெண்ணெய் ;

(13) பொதிகள் அல்லது கொள்கலன்களில் விற்கப்படும் முட்டைகள் ;

(14) பொதிகள் அல்லது கொள்கலன்களில் விற்கப்படும் தயிர் ;

(15) பொதிகள் அல்லது கொள்கலன்களில் விற்கப்படும் (வெறும், நறுமணச் சுவையூட்டப்பட்ட, இனிப்பூட்டப்பட்ட) திரவப்பால் ;

(16) பொதிகள் அல்லது கொள்கலன்களில் விற்கப்படும் பொடிபண்ணப்பட்ட பானங்கள்

(17) போத்தலில் அடைக்கப்பட்ட தண்ணீர் ;

(18) பொதிகள் அல்லது கொள்கலன்களில் விற்கப்படும் நூடில்ஸ் ;

(19) பொதிகள் அல்லது கொள்கலன்களில் விற்கப்படும் சோயா உற்பத்திப் பொருட்கள் ;

(20) பொதிகள் அல்லது கொள்கலன்களில் விற்கப்படும் பச்சையான, வறுத்த, உப்புச் சுவையூட்டப்பட்ட அல்லது வாசனைத் திரவியங்களிடப்பட்ட கிழங்குகள், கடலைகள், அவரை மற்றும் உடனடியாக உண்ணக்கூடிய உணவு.

பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் கட்டளை மூலம்.

ஆர். ஐ. விமலசேன,
தலைவர்.

கொழும்பு,
2004, சனவரி 20.

2- 136

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.